

கள்ளக்குறிச்சி மாவட்டம், கச்சிராயபாளையம் கோமுகி ஆற்றங்கரையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தில் ரூ.1.68 கோடியில் எரிவாயு தகன மேடை அமைக்கும் பணியை வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் கலந்து கொண்டு துவக்கி வைத்தார், அதேபோல் மேட்டுப்பாளையம் பெருமாள் பிள்ளை தெருவில் ரூ.9 லட்சம் மதிப்பிலும் கோமுகி அணை குடியிருப்பு அய்யனார் கோவில் தெருவில் ரூ.7.5 லட்சம் மதிப்பிலும், அம்மாபேட்டை பிள்ளையார் கோவில் தெரு குளம் பின்புறத்தில் ரூ.7.5 லட்சம் மதிப்பிலும் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளை துவக்கி வைத்தார், இதில் பேரூராட்சி தலைவர் பன்னீர்செல்வம், பேரூர் கழக செயலாளர் ஜெயவேல்,துணைத் தலைவர் தண்டபாணி, செயல் அலுவலர் ரஞ்சித், பொறியாளர் நடராஜன் மற்றும் வார்டு கவுன்சிலர்கள், கழக நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கையால்

# ஆவின் பால் விற்பனை நாளொன்றுக்கு 30 இலட்சம் லிட்டர் விற்பனை!

## அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் தகவல்!

சென்னை, ஜன. 2 -

தமிழ்நாடு அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கையால் ஆவின் பால் விற்பனை 2024-25-ல் சுமார் 7 இலட்சம் லிட்டருக்கு மேல் அதிகரித்து தற்போது நாளொன்றுக்கு 30 இலட்சம் லிட்டர் விற்பனையாகிறது என்று பால்வளத் துறை அமைச்சர் ஆர்.எஸ். இராஜ கண்ணப்பன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான ஆட்சியில் ஆவின் நிறுவனத்தின் சாதனையாக 7 இலட்சம் லிட்டர் பால் விற்பனை அதிகரித்துள்ளது.

தமிழ்நாடு முழுவதும் அமைந்துள்ள 27 ஒன்றியங்கள் மற்றும் சென்னை மெட்ரோ மூலமாக சுகாதாரமான முறையில் தரம் ஒன்றே குறிக்கோளாகக்



கொண்டு பால் மற்றும் பால் உபப்பொருட்களை தயாரித்து நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் ஆவின் நிறுவனம் விற்பனை செய்து வருகிறது.

தமிழ்நாடு முழுவதும் கடந்த 2019-2020ஆம் ஆண்டில் சுமார் 23 இலட்சம் லிட்டராக இருந்த ஆவின்பால் விற்பனையை, அரசு எடுத்த பல்வேறு நடவடிக்கையின் காரணமாக 2024-2025-ல் சுமார் 7 இலட்சம் லிட்டருக்கு மேல் அதிகரித்து தற்போது நாளொன்றுக்கு 30 இலட்சம் லிட்டர் விற்பனை செய்து வருகிறது.

தமிழ்நாடு முதலமைசர் அவர்களின் தலைமையில் செயல்படும் தமிழ்நாடு அரசு, பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையினை கனிவுடன் பரிசீலனை செய்து, 18.12.2023 முதல் ஆவின் கூட்டுறவு சங்கத்திற்கு பால் வழங்கும் பால் உற்பத்தியாளர்களுக்கு, லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 உற்பத்தி ஊக்கத்தொகையாக பிரதம சங்கங்களின் மூலம் நிலுவையின்றி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. பால் உற்பத்தியாளர்களின் கோரிக்கையின்படி நலச் சங்கத்தின் கோரிக்கையின் படியும், மாவட்ட ஒன்றியத்தில் இருந்து பால் உற்பத்தியாளர்களின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக அரசு அறிவித்த ரூ.3 ஊக்கத்தொகை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தின் மூலம் இந்த பணி ஜனவரி 2025 முதல் வாரத்தில் செயல்படுத்தப்பட உள்ளது. அதனைத் தொடர்ந்து பிற மாவட்டங்களிலும் மேற்கண்ட நடைமுறை அமுல்படுத்தும் விதமாக அரசு அறிவித்த லிட்டர் ஒன்றுக்கு ரூ.3 ஊக்கத்தொகை மாவட்ட ஒன்றியத்தில் இருந்து பால் வழங்கிய சங்க உறுப்பினர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட உள்ளது என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் தெரிவித்தார்.

### துணை முதல்வர் பிறந்தநாள்: நகர - ஒன்றிய- பேரூர் தோறும்

# சேலம் கிழக்கு மாவட்டத்தில் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் அறிவிப்பு!

சேலம், ஜன. 2 -

சேலம்கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு ;

துணை முதலமைச்சர் - கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் முன்னிட்டு நகர, ஒன்றிய, பேரூர் தோறும் சேலம் கிழக்கு மாவட்டத்தில் அரசின் சாதனை விளக்க பொதுக் கூட்டங்கள் நடைபெறுகின்றன.

கூட்டம் நடைபெறும் நாள், பேசுவோர், தலைமை, முன்னிலை, நகர, ஒன்றிய , பேரூர் விவரம் வருமாறு ;

03.1.2025 காஞ்சி விஷார் க.தமிழரசன் த.மருதமுத்து (பெ.நா.பாளையம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர்)



பெ.நா.பாளையம் தெற்கு ஒன்றியம்,

03.1.2025 ஆலந்தூர் ஒப்பிலா மணி க.ரத்தினவேல் (அ.பட்டணம் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ) அ.பட்டணம் வடக்கு ஒன்றியம்,

04.1.2025 தூத்துக்குடி சரத்பாலா எஸ்.வெண்ணிலா சேகர் (வீரபாண்டி ஒன்றியக் கழகச் செயலாளர் ) வீரபாண்டி ஒன்றியம்,

04.1.2025 வேலூர் கென்னடி வெ.மாதேஸ்வரன் -(வாழப்பாடி தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ) வாழப்பாடி தெற்கு ஒன்றியம்

04.1.2025 குடியாத்தம் பாரி ந.சண்முகம் (தம்மம்பட்டி பேரூர் கழக செயலாளர் ) தம்மம்பட்டி பேரூர்

04.1.2025 அத்திப்பட்டு சாம்ராஜ் க.மணி (எ) பழனிசாமி (தலைவாசல் மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் ) தலைவாசல் மத்திய ஒன்றியம்

05.1.2025 ஈரோடு இளையகோபால் க.உமா சங்கர் ( பனமரத்துப்பட்டி ஒன்றியக் கழகச் செயலாளர் ) பனமரத்துப்பட்டி ஒன்றியம்

05.1.2025 முரசொலி மூர்த்தி கே.வி.ராஜா (ஏற்காடு ஒன்றியக் கழகச் செயலாளர் ) ஏற்காடு ஒன்றியம்

05.1.2025 முனைவர். எஸ்.திவ்யா அ.விஜயகுமார் (அ.பட்டணம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ) அ.பட்டணம் தெற்கு ஒன்றியம்

05.1.2025 போடி காமராஜ் எஸ்.சி.சக்கரவர்த்தி( வாழப்பாடி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ) - வாழப்பாடி வடக்கு ஒன்றியம்

05.1.2025 முனைவர். பொன்னேரி சிவா வெ.சத்தியமூர்த்தி (பெ.நா.பாளையம் மத்திய ஒன்றிய கழக செயலாளர் ) பெ.நா. பாளையம் மத்திய ஒன்றிய

05.1.2025 கந்திலி கரிகாலன் என்.பி.வேல்முருகன் ( நரசிங்கபுரம் நகர கழக செயலாளர் ) நரசிங்கபுரம் நகரம்

06.1.2025 பவானி கண்ணன் த.மாணிக்கம் (சேலம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ) சேலம் தெற்கு ஒன்றியம்

06.1.2025 எட்டாயபுரம். தமிழ்ப்பிரியன் தி.சிவராமன் (பெ.நா.பாளையம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ) -பெ.நா. பாளையம் வடக்கு ஒன்றியம்

06.1.2025 சேலம் சுஜாதா கே.பாலசுப்ர மணியம் (ஆத்தூர் நகரக் கழகச் செயலாளர்) - ஆத்தூர் நகரம்

06.1.2025 ம.மோகநிதி க.முருகபிரகாஷ் (ஆட்டையாம்பட்டி பேரூர் கழக செயலாளர் ) -ஆட்டையாம்பட்டி பேரூர்

0712025 ஆவடி பாஸ்கர் வே.செழியன் (ஆத்தூர் ஒன்றியக் கழகச் செயலாளர்)- ஆத்தூர் ஒன்றியம்

08.1.2025 பெரிய கோடீஸ்வரன் பெ.பாலமுருகன் (தலைவாசல் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் )-தலைவாசல் வடக்கு ஒன்றியம்

09.1.2025 அஜீத்குமார் ஆர்.சித்தார்த்தன் (கெங்கவல்லி ஒன்றியக் கழகச் செயலாளர்)- கெங்கவல்லி ஒன்றியம்

10.1.2025 சூரியபிரகாஷ் பி.ஜி.அழகுவேல் (தலைவாசல் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ) -தலைவாசல் தெற்கு ஒன்றியம்

இவ்வாறு கூட்டங்கள் நடைபெறுவதாக மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.


**பெருநகர சென்னை மாநகராட்சி கட்டடத்துறை**

க.து.ந.க.எண்.பி1 / 2950 / 2024

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்) அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

Improvement Works of **Burial Ground** at Various Locations in Zones 03, 04, 05, 06, 07, 08, 09, 10, 11 & 13,, Construction of **Administrative Office Building** at "D" Depot in Aadithanar Salai, Pudupet in Div - 63, Zone - 05 **and** Proposed Construction of **Community Hall** in Thiruvottiyur High Road in Div - 11, Zone - 01 (NNT FUND) (7 சிப்பங்கள்)

குறைந்த பட்ச பணியின் மதிப்பு ரூ.215.82 இலட்சம் அதிக பட்ச பணியின் மதிப்பு ரூ.445.05 இலட்சம்
முன்வைப்பு தொகை :- பணியின் மதிப்பு தொகையில் 1%

ஒப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : **23.01.2025 அன்று பிற்பகல் 3.00 P.M மணி வரை**

ஒப்பம் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : **24.01.2025 அன்று பிற்பகல் 3.00 P.M மணி**

மேலும் விவரங்களுக்கு **http://tntenders.gov.in** இணையதளம் மூலம் பார்த்து தெரிந்து கொள்ளவும்.

செ.ம.தொ.இ / 5722 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**கண்காணிப்பு பொறியாளர் (கட்டடம்)**




மதுரையில் நடைபெற்ற மதுரை வடக்கு மதுரை மாநகர் மதுரை தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம் தெற்கு மாவட்டச் செயலாளர் சேடப்பட்டி மு.மணிமாறன் தலைமையில் தலைமைக் கழக வழக்கறிஞர் கலாநிதி, மாநகர் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் தேவசேனன், தெற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் சிவனேசன் தலைமைக் கழக வழக்கறிஞர் ராஜா முகமது ஆகியோர் முன்னிலையில் மாநில சட்டத்துறை இணைச் செயலாளர் தலைமை கழக வழக்கறிஞர் ரவிச்சந்திரன் கூட்டத்தில் சிறப்புரையாற்றினார். உடன் மாநில வழக்கறிஞர் அணியினர், மாவட்ட வழக்கறிஞர் அணியினர், வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் திரளான வழக்கறிஞர் அணியினர் கலந்து கொண்டனர் .

### சிவகங்கை காளையார்கோவிலில் புதுமைப் பெண் திட்டம்!

# முதல்வரின் சீரிய திட்டங்கள் பல்வேறு மாநிலங்களில் செயல்படுத்தப்படுகின்றன!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஜன. 2 -

சிவகங்கை மாவட்டம் காளையார்கோவில் புனித மைக்கேல் பொறியியல் கல்லூரி வளாகத்தில் தமிழக முதல்வரின் அரசு உதவி பெறும் பள்ளியில் படித்து தமிழ் வழியில் பயிலும் உயர் கல்வி மாணவர்களுக்கான ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப்பெண் திட்ட விரிவாக்க துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசாஅஜித் தலைமையில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி ரதிதேவி வரவேற்று பேசினார் . இந்த நிகழ்ச்சியில் மாவட்ட அளவில் புதிதாக 26 81 மாணவிகளுக்குமாதம்தோறும் ரூபாய் 1000 வழங்கும் புதுமைப்பெண் திட்டத்திற்கான வங்கி காசோலை கணக்கினை வழங்கி கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது .

தமிழக முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள புதுமைப்பெண் திட்டம் கடந்த இரண்டு ஆண்டுகளில் மாணவ - மாணவியர் களிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்றுள்ளது. ஆண் பெண் இருபாலரும் கல்வி பெற வேண்டும் . அதில் குறிப்பாக பெண்



கள் கல்வி அறிவு பெற வேண்டும். பெண்கள் அதிக அளவில் படித்தால் தான் அந்த கிராமமும் முன்னேறும் வீடும் முன்னேறும். நாடு முன்னேறும் .என்ற அடிப்படை திட்டத்தின் கீழ் புதுமைப்பெண் திட்டத்தினை முதல்வர் செயல்படுத்தி வருகிறார். இந்தியாவிலேயே தமிழக அரசு உயர் கல்வியில் முதலீடம் பெற்ற மாநிலமாக திகழ்ந்து வருகிறது. தமிழக முதல்வர் தலைமையிலான திராவிட அரசு பெண்கள் முன்னேற்றத்திற்கான அரசுஆகும். கழகம் ஆட்சிக்கு வரும்போது எல்லாம் பெண்கள் வாழ்வில் முன்னேற்றம் ஏற்படுகிறது. கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வராக இருந்த போது சொத்தில் பெண்களுக்கு சம உரிமை சட்டம் கொண்டு வந்தார். பள்ளி, கல்லூரி வரை படிப்பிற்கான நிதி உதவிகளை செய்து வந்தார் .பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில் தமிழக முதல்வர் தளபதி அவர்களும் பெண்கள் உயர் கல்வி படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஆயிரம் ரூபாய் புதுமைப்பெண் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறார். இத்திட்டம் தேர்தல் வாக்குறுதியில் கூறப்படாத திட்டமாகும் பெண்கள் வாழ்வில் ஒளி ஏற்ற வேண்டும். அவர்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும். அவர்கள் சுயமாக நிற்க வேண்டும் என்ற அடிப்படையில் தமிழக முதல்வர் அவர்களின் எண்ணத்தில் உருவான உயர்ந்த திட்டம் ஆகும். இத்திட்டத்தினால் கடந்த இரண்டு ஆண்டுகளில் பள்ளி, கல்லூரியில் படிக்கும் மாணவ - மாணவியர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது .இதனால் தமிழகத்தில் கல்வி வளர்ச்சி அதிகரிக்கும் . தமிழகத்தில் சுமார் 8 லட்சம் பேர் இத்திட்டத்தில் மாதம் ரூபாய் ஆயிரம் பெற்று வருகிறார்கள். கல்வியின் தரமும் தமிழகத்தில் சிறப்பாக உள்ளது. முதல்வர் அவர்கள் தந்தை ஸ்தானத்திலிருந்து உங்களை படிக்க வைக்க வேண்டும் என்று இத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அரசிற்கு பல்வேறு நிதி நெருக்கடிகள் இருந்தாலும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதில் முதல்வர் அவர்கள் முனைப்பாக உள்ளார்.

சிவகங்கை மாவட்டத்தில் ஏற்கனவே 57கல்லூரிகளில் 4500 மாணவ மாணவிகளுக்கு மாதம்தோறும் ரூபாய் ஆயிரம் வழங்கப்பட்டு வருகின்றது .இன்று முதல் புதிதாக 49 பள்ளிகளில் 26 81 மாணவிகளுக்கு இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. ஆக மொத்தம் 71 81 மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூபாய் 1000 வழங்கப்பட்டு வருகின்றது. எல்லோருக்கும் எல்லாம் என்ற திராவிடமாடல் ஆட்சியின் கொள்கைதான் இது ஆகும்.

தமிழக அரசின் பல்வேறு திட்டங்களை ஒன்றிய பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய அரசு பல்வேறு மாநில தலைமைச் செயலாளர்களுக்கு தமிழக அரசின் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார்கள் .இது நமது மாநிலத்திற்கு கிடைத்த மிகப்பெரிய ஒரு பாராட்டாகும். பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில் திராவிட மாடல் ஆட்சியில் பெண்கள் முன்னேற்ற த்திற்காக பாடுபட்டு வரும் கழக தலைவர் தளபதி அவர்களுக்கு தொடர்ந்து நீங்கள் ஆதரவினை தர வேண்டும்.

தொடர்ந்து நீங்கள் நன்றாக படித்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும். இவ்வாறு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் புனித ஸ்டாலின் மைக்கேல் கல்லூரிகளின் தாளாளர் எம்.ஸ்டாலின் ஆரோக்கியராஜ், மண்டல கூட்டுறவு இணைப்பதிவாளர் ராஜேந்திர பிரசாத் ,கோட்டாட்சியர் விஜயகுமார், வட்டாட்சியர் முபாரக், மத்திய கூட்டுறவு வங்கி மேலாளர் திருமதி உமா மகேஸ்வரி, முன்னோடி வங்கி மேலாளர் பிரவீன் குமார் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

தேவகோட்டை சேவுகன் அண்ணாமலை கல்லூரி மாணவி தீபிகா, சிவகங்கை அரசு மகளிர் கலைக் கல்லூரி மாணவி வெண்ணிலா ஆகியோர் முதல்வரின் புதுமைப் பெண் திட்டத்தி னால் குறித்து தாங்கள் பயன் பெற்றது குறித்து எடுத்துரைத்தார்கள் .

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், செயற்குழு உறுப்பினர் அ.முகமது, பேரூராட்சி மன்றத் தலைவர் திருமதி கோகில ராணி நாராயணன், ஒன்றிய செயலாளர்கள் துரை.ராஜாமணி, யோக.கிருஷ்ண குமார், வே.ஆரோக்கிய சாமி ஆர்.எம்.கென்னடி, திருமலை முத்துராம லிங்கம் எம்.அண்ணாதுரை, மானாமதுரை ஒன்றிய குழு தலைவர் திருமதி லதா அண்ணாதுரை,நாகனிரவி. ,நா.நெடுஞ்செழியன், கா.வெங்கட்ராமன், ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார், மெ.காளிமுத்து, சன் சீமான்சுப்பையா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார், வர்த்தக அணி ருக்மா சரவணன் மானாமதுரை நகர மன்ற துணை தலைவர் பாலா சுந்தர் மானாமதுரை நகர செயலாளர் க.பொன்னுச்சாமி உட்பட கல்லூரி மாணவ - மாணவிகள் கலந்து கொண்டார்கள்.



கழக இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்ட மாணவரணி சார்பில் அன்னவாசல் தெற்கு ஒன்றியம் வயலோகத்தில் நடைபெற்ற மாநில அளவிலான ஆண்களுக்கான மாபெரும் கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசளிப்பு நிகழ்ச்சி மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே. செல்லபாண்டியன் தலைமையில் ஒன்றிய செயலாளர் கே.எஸ்.சந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. மொத்தம் ரூபாய் 1 லட்சம் பரிசுத்தொகையும் கோப்பைகளும் வழங்கப்பட்டன. நிகழ்வில் மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி, பொதுக்குழு உறுப்பினர்கள் தென்னலூர் எம்.பழனியப்பன், ராப்பூசல் எம்.செந்தில்குமார், திருமயம் முன்னாள் ஒன்றிய செயலாளர் எம்.பி.சரவணன், மாவட்ட கவுன்சிலர் கை.பழனிச்சாமி, அன்னவாசல் நகர செயலாளர் எம்.எஸ்.ஏ.முகமது ரிசா, மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே.எஸ்.ச.இளையசூரியன் மற்றும் துணை அமைப்பாளர்கள், விராலிமலை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் தமிழினியன் கந்தர்வக்கோட்டை தொகுதி சமூக வலைதள பொறுப்பாளர் எழில் ராஜா உள்ளிட்ட ஒன்றிய கிளை கழக நிர்வாகிகள். மாவட்ட கைப்பந்தாட்ட கழகம் செயலாளர் வில்சன் மற்றும் பார்வையாளரான பொதுமக்கள் பங்கேற்றனர்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் திருமங்கலத்தில் கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட இளைஞர் சார்பில் தெரு முனை பிரச்சார கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. உரையாற்றினார். உடன் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா, ஒன்றியக் கழகச் செயலாளர் ஞான.இமையநாதன், மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியச் செயலாளர் ப.முருகமணி, அரசு வழக்கறிஞர் இரா.சேயோன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது, துணை அமைப்பாளர் சௌ.சர்வோதயன், இளம் பேச்சாளர் ம.க.சூர்யா, மற்றும் கழக மூத்த முன்னோடி பன்னீர் மற்றும் பலர் உள்ளனர்.